திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே முந்திரித் தொழில் என்பது ஒரு பாரம்பரியமான தொழில். 1967-க்கு முன்பே 'முந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழில் தேய்கிறது தெற்கே' என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோஷமாக இருந்திருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள முந்திரித் தொழிலைத் தேயாமல் பாதுகாப்பதற்காக, அகில இந்திய அளவில் 'முந்திரி வாரியம்' இருப்பதுபோல தமிழ்நாட்டிலும் ஒரு முந்திரி வாரியம் அமைத்துச் செயல்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் உள்ள வாரியம் இப்போது கேரளாவிலிருந்து செயல்படுகிறது. தமிழ் நாட்டிலும் அப்படி ஒரு வாரியம் அமைக்கலாமா என்ற கருத்து அரசுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தி.

*1089. திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சராசரி உப்பு உற்பத்தி எவ்வளவு ?

(ஆ) உப்பின் தரம் உயர்த்தவும், உற்பத்தியைப் பெருக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 1986, 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சராசரியாக பதினாறு இலட்சம் டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற் போது சிறு அளவில் உப்பு உற்பத்தி செய்பவர்கள் பலர் பழைய முறைகளைக் கையாண்டு உப்பு உற்பத்தி செய்வதால் உப்பின் தரமும் உற்பத்தியும் குறைகின்றன. அவர்களை விஞ்ஞான முறையில் உப்பு உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையில் தொழில் வணிகத் துறை பயிற்சி முகாம்களை நடத்தி உற் பத்தியைப் பெருக்கி, தரத்தை உயர்த்தவும் ஏற்பாடுகள் செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 40 சிறு அளவில் உப்பு உற்பத்தி யாளர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 201

உப்பு வாரியத்தின் அலுவலர்களும், உப்பு உற்பத்தியாகும் மாவட்டங்களுக்குப் போய் அங்கு உப்பு உற்பத்தி செய்பவர்களின் குறைகளைக் கண்டறிந்து உப்பின் உற்பத்தி மற்றும் தரத்தை உயர்த்த தக்க வழிமுறைகளை உப்பு உற்பத்தியாளர்களுக்கு விளக்குகின்றனர். உப்பு உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சுமார் 28,260 ஏக்கர் அரசின் புறம்போக்கு நிலங்களை உப்பு விளைச்சலுக்கு ஏற்றதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களுக்கு இது பற்றி எழுதி இந்த நிலங்களை உப்பு உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் உப்பு உற்பத்தி செய்வதில் ஆர்வமுடைய தொழில் முனைவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மேற் குறிப்பிட்டுள்ள நிலங்களை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் அளிக்குமாறும் தொழில் வணிகத் துறை பரிந்துரை செய்துள்ளது. தூத்துக்குடி பகுதியில் சிறப்பு ஆய்வு (Hydro Geological Study) நடத்தி தரமான உப்பு உற்பத்தி செய்வதற்கான புதிய இடங்களைக் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு முதற் கட்டமாக இப்பணியினை பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள நிலத்தடி நீர்ப்பிரிவு பகுதிக்கு ஒப்படைக்கவும், இதற்காக நிதி உதவியினை உப்பு வரி நிதியிலிருந்து (Salt cess fund) பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருவநிலை திடீரென மாறுகிற நிலை வருகிறபோது உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்துள்ள உப்பு கரைந்து போவதால் அவர்கள் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் சிறிய அளவில் தான் உற்பத்தி செய்பவர்களாக இருக்கிறார்கள். எனவே, நஷ்டத்தை ஈடுகட்ட அவர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்க முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தந்த நேர்வுகள் குறித்து அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப்பை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகளை வேதாரண்யம், வாலிநோக்கம் ஆகிய இடங்களில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா? ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் உற்பத்தியாகும் உப்பை சாலை வாயிலாகவும், ரெயில் வாயிலாகவும் அனுப்புவதற்குப் போதுமான வசதிகள்

இல்லை. அதனால் அந்தப் பகுதியில் உற்பத்தியாகும் உப்பைக் கொண்டு பெரிய ரசாயன உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாமென்று தூத்துக்குடி ஆல்சகாலிக் நிறுவனம் தயாரித்த ஓர் அறிக்கையில் பரிந்துரை செய்திருக்கிறது. அதனுடைய அடிப்படையில் சோடா ஆஷ் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கும் சாத்தியக் கூறுகளைத் தமிழ்நாடு அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையையொட்டி கொடுக்கப்பட்டுள்ள இந்தச் செய்தியில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, கடற்கரைப் பகுதியான வாலிநோக்கத்தில் அரசு சார்பாக அமைக்கப்பட்டுள்ள 'சால்ட் கார்ப்பரேஷன்' சார்பில் தொழில் துவங்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டிலிருந்து வந்த நிபுணர்களும், தமிழ்நாட்டிலுள்ள நிபுணர்களும் வாலிநோக்கம் பகுதியிலிருந்து கிடைக்கும் உப்பு தரமான உப்பு, ஆகவே அங்கு இத்தொழில் வளர்வதற்கு அதிகமான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அரசுக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் வாலிநோக்கத்தில், பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற அந்தக் கடற்கரை பகுதியில், இத்தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசின் ஆய்வில் திட்டம் உள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்த ஆசையைக் கருத்தில் கொண்டு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் ஏராளமான அளவிலே உப்பை நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அதே போல தமிழ்நாட்டில் இன்னும் பல்வேறு கடலோரப் பகுதிகளில் இப்படிப்பட்ட உப்பைத் தயாரிப்பதற்கான திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? எந்தெந்த இடங்களிலே அப்படிப்பட்ட உப்பை நாம் எடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது ? காரணம் முதலமைச்சர் தந்திருக்கிற விவர அறிக்கையில் 28,260 ஏக்கர் அரசின் புறம்போக்கு நிலங்கள் உப்பு விளைச்சலுக்கு ஏற்றதாக இருப்பதை அரசு கண்டு பிடித்திருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். எந்தெந்த இடங்களிலே அந்த வாய்ப்பு நமக்கு இருக்கின்றது ? அதோடு இந்த உப்பளங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இன்னும் தாழ்ந்த நிலைமையிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

1990 சனவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். கடற்கரை ஓரங்களில். (சிரிப்பு).

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப்பளங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு ஏதாவது திட்டங்களை வைத்து இருக்கின்றதா ? காரணம் அந்தந்தப் பகுதிகளில் பார்த்தால் அந்த உப்பளங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களினுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்கின்றது. அதற்கு ஏதாவது நடவடிக்கை உண்டா என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப்பை மூலப் பொருளாகக் கொண்டு நாம் தொடங்க இருக்கின்ற தொழிற்சாலைகளின் வாயிலாகத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையையும் உயர்த்து வதற்கு ஓரளவு நியாயம் இருக்கிறது. அந்த முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மதிப்பிற்குரிய துணைத் தலை வர் அவர்களே, ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்று பழமொழி சொல்வார்கள். அந்த உப்பை உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் கேட்டார்கள். ஆனால் பொதுவாக, கொடுத்துள்ள விவர அறிக்கையில் தொழிலாளர்களைப் பற்றி எந்த விவரமும் இல்லை. ஆனால் உண்மையிலேயே உப்பிலே நாள் பூராவும் பாடுபடக்கூடிய அவர்களுக்கு அடிப்படை ஊதியம் எதுவுமே நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே அரசு அதைக் கவனித்து அல்லது உப்புத் தொழிலை அரசு ஏற்று அதை நல்ல முறையிலே முன்னேற்றுவதற்கும், தொழிலாளர்களுக்கு நியாய மான ஊதியம் வழங்குவதற்கும் அரசுக்கு ஆலோசனை உண்டா, நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், எழுப்பிய மூல வினாவிற்குத் தான் விடை அளிக்கப்பட்டு இருக் கிறது. அதனால் தொழிலாளர் பிரச்சினை அதில் எழவில்லை. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று அம்மையார் சொன்னார் கள். அதைப் போல தொழிலாளர்களைப் பொறுத்த வரை யிலும் இந்த அரசு உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கும்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மரக்காணம் பகுதி யில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மூலப் பொருளாகக் கொண்ட உப்புத் தொழிலைச் செய்து

[1990 சனவரி 20

வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கித் தருவார்களா? ஆம் எனில், நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, உப்பில் துணைப் பொருளான ஜிப்சம், கழிவுப் பொருளான ''பிட்டர்ஸ்'' ஆகிய இந்த இரண்டு பொருள்களையும் கொண்டு பல இரசாயன உற்பத்திகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குத் தோதாக அவர் குறிப்பிடுகின்ற இடம் அமையுமேயானால் கவனிக்கப்படும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உப்புக்காக விசேஷ கவனம் செலுத்தி அண்மையில் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தை நாடகமாக நடத்திக் காட்டியோரின் ஆட்சியில் உப்பு உற்பத்தி மரணப் படுக்கையில் கிடக்கிறது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அப்படி மரணப் படுக்கையில் கிடப்பதாக, ஆளும் கட்சித் தலைவர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதோடு இன்றைக்கு, ஓராண்டுக் காலம் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, மரணமே அடைந்து சவப் பெட்டிக்குள் அது சென்று கொண்டிருப்பதை உணருகின்றீர்களா ? அதிலும் தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த உப்புத் தொழில் நசிந்துவிடாமல் பாதுகாக்க உப்பு உற்பத்தி நிறுவனம் அமைப்போம் என்று வேறு சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு நிறுவனத்தை ஏன் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் செய்து முடிக்கவில்லை என்ற கேள்வியையும் வைத்து அதோடு விவர அறிக்கையையொட்டி........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவர அறிக்கை எல்லாம் வைக்க முடியாது ; வினாவை மட்டும் தொடுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : விவர அறிக்கையையொட்டி கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற புறம்போக்கு நிலங்களைத் தனியார் வசம் ஒப்படைக்க டிப்பார்ட்மென்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அன்டு காமர்ஸ்.....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியை மட்டும்தான் கேட்க வேண்டும். அமருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட உப்புத் தொழிற்சாலைபற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே வினா எழுப்பியுள்ளார். முதலிலே சொன்னேன், வேதாரண்யம் பகுதியிலே உற்பத்தி ஆகும் உப்பைக் கொண்டு பெரிய இரசாயனத் தொழிற்சாலை தொடங்கலாம் என தூத்துக்குடி ஆல்ககாலிக்ஸ் அன்டு

1990 சனவரி 20]

கெமிக்கல்ஸ் நிறுவனம் தயாரித்த ஒரு அறிக்கையிலே பரிந்துரை செய்யப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு சோடா ஆஷ் தொழிற்சாலை அந்தப் பகுதியில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு அரசு ஆராய்ந்து வருகிறது மேலும்—இன்னும் விவரம் சொல்ல வேண்டுமானால்—டாட்டா எகனாமிக் கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்திடமிருந்து, வேதாரண்யம் பகுதியிலே உப்பை அடிப்படையாகக் கொண்டு ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டதால், அதற்கான அறிக்கையைப் பெறுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

9-15 மணி

காஸ்டிக் சோடா தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே ஆரம்பிப்பதற்கும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இந்த ஆய்வுகளெல்லாம் விரைவிலே முடிவுற்று, தொழிற்சாலையை அங்கே விரைவிலே தொடங்குவதற்கான அறிவிப்பு வெளிவரும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டதெல்லாம் சவப் பெட்டிக்குப் போய்விட்டதா என்று கேட்டார்கள். சவப் பெட்டிக்குப் போனாலும் அது அழுகாமல் இருக்க, அதற்கும் உப்புதான் தேவை. (சிரிப்பு).

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சுமார் 16 இலட்சம் டன் உப்பு, தமிழ்நாட்டிலே உற்பத்தியாவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதிலே பெரும் பகுதி தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகும் உப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் சிறு உற்பத்தியாளர்களும் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உப்பு உற்பத்திக்காக ஆகும் செலவை விட அதைச் சேமித்து வைக்க ஆகும் செலவு கூடுதலாக ஆகிறது. ஆக இந்த இரண்டும் சேர்ந்து உப்பு விலையை அதிகரிக்கிறது. எனவே, உப்பைச் சேமித்து வைப்பதற்கான கிடங்கு வசதிகளை அரசு செய்து தருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இது கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், 28,260 ஏக்கர் அரசின் புறம்போக்கு நிலங்கள் உப்பு விளைச்சலுக்கு ஏற்றதாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தொழில் முனைவோர்களைக் கண்டெடுத்து, அவர்களிடம் மேற்குறிப்பிட்ட

நிலங்களை நீண்ட கால குத்தகை அடிப்படையில் விடுவதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போதே, உப்பளத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தினம் ரூ. 10-க்கு மேல் சம்பளம் பெறுவதில்லை என்று மிகவும் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கூட்டுறவு முறையிலோ அல்லது தொழிலாளர்கள் ஒன்றாக இணைந்தோ அல்லது உப்பு உற்பத்தி நிறுவனம் என்று சொல்லப்படும் அரசாங்க உப்பு உற்பத்தி நிறுவனம் மூலமாகவோ உற்பத்தி செய்யக் கூடிய ஏற்பாட்டைச் செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு நியாயமான ஊதியம் கிடைக்கக் கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பலரும் கேட்ட கேள்விகளினுடைய மையமாக தொழிலாளர்கள் பிரச்சினை இருக்கின்ற காரணத்தால், அதனை மனதில் கொண்டு, அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தியோடு நம்முடைய நாட்டின் சுதந்திர வரலாறும் அடங்கியிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் செய்யூர் பகுதியில் ஆதிதிராவிடர் கூட்டுறவு உப்பு உற்பத்தியாளர் சங்கம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்போது அதற்கான செஸ் வரி அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் அந்தச் சங்கம் இயங்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். எனவே அரசு அந்த செஸ் வரியை ரத்து செய்யவோ அல்லது குறைப்பதற்கோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, விவரமாக எழுதி, தனியாகக் கொடுத்தால், அது குறித்து அரசு கவனிக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிற மூல வினாவில் ‘‘ உப்பின் தரம் உயர்த்தவும் ’’ என்ற செய்தியும் கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அயோடைஸ்டு சால்ட்—என்கின்ற அயோடின் கலந்த உப்பு தயாரிப்பதன் மூலம் நோய் வராமல் தடுப்பதற்குரிய வழி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட உப்பினுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள் ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா ? உப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்களுக்கு இருக்கிற குறைகளைப்பற்றி அல்லது வேண்டுமென்று கேட்கிற சில சலுகைகளைப்பற்றி அரசாங்கத்திற்கு ஏதேனும் கோரிக்கை விடுத்து உள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தியின்போது மேற்கொள்ளப்படுகிற பழைய முறையின் காரணமாக தரக் குறைவும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் சொன்னது போல் சில ஆபத்தான விளைவுகளும் ஏற்படக் கூடும் என்பதற்காக, விஞ்ஞான முறையிலே இந்த உற்பத்தியைச் செய்தால் தரம் உயரவும், உற்பத்தி பெருகவும் வழியுண்டு. அவர்கள் சொன்ன அந்த ஆபத்துக்கள் நீக்கப்படுவதற்கும் வழியுண்டு. அவற்றை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசை ஆதரித்துக் கொண்டிருக்கிற முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் சமீபத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உப்புக்கு வரி போட்டால் வேறு எந்த வரியும் போட வேண்டியதில்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் சொன்னதால் எங்கே உப்புக்கு வரி போட்டுவிடுவாரோ என்று ஏழைகளெல்லாம் பயந்து கொண்டிருக்கிறார்கள். எனவே உப்புக்கு வரி வராது என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு உப்புக்கு வரி விதிக்காது என்று நான் ஒப்புக்குச் சொல்லவில்லை; உண்மையாகவே சொல்கிறேன் (சிரிப்பு).

ஒட்டன்சத்திரத்தை வட்டமாக்குதல்.

*1527. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தை வட்டமாக்கும் (Taluk) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டுக்குள் பழனி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒட்டன்சத்திரத்தை வட்டமாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.